**19.09.2024**

**CC No. 331/2022**

A1- A4 produced. A5 present.

திருமதி.விஜயஅனிதா

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனக்கு கிடைத்த ரகசிய தகவலை நான் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேன். இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் பொதுநாட்குறிப்பினை பார்வையிட்டார் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பினை பார்வையிடும் பட்சத்தில் தகவல் எத்தனைமணிக்கு கிடைத்தது என்றும் எத்தனை மணிக்கு வழக்கு சம்பந்தமாக கிளம்பினோம் என்றும் யார், யார் அந்த நேரத்தில் காவல்நிலையத்தில் இருந்து கிளம்பினோம் என்றும், என்ன ஆயத்தங்களோடு செல்கிறோம் என்றும் தெரியவருமா என்றால் ஞாபகம் இல்லை. அப்படி பொது நாட்குறிப்பில் குறிப்பிடவேண்டும் என்பது நடைமுறையாகும். என்னுடைய வாகனம் TN 22 G 0308 ஆகும். இந்த வாகனம் அரசாங்கத்தால் அரசு பணிக்கு கொடுக்கப்பட்ட வாகனமாகும். அதற்கு டிரைவர் உண்டு. தலைமைக்காவலர்-சங்கர் அதன் டிரைவராக இருந்தார். அந்த வாகனத்தை பயன்படுத்துவதற்கு லாக்புக் உண்டு. அந்த லாக்புக்கை பார்வையிடும் பட்சத்தில் எனது வாகனம் எந்தெந்த இடத்திற்கு சென்றுள்ளது என்றும் எத்தனை மணிக்கு சென்றுள்ளது என்றும் எவ்வளவு எரிபொருள் போடப்பட்டுள்ளது என்ற விபரமும் தெரியவரும். விசாரணை அதிகாரி அந்த லாக்புக்கை பார்வையிடவில்லை. அந்த லாக்புக்கை பார்த்தால் அன்று நான் சம்பவ இடம் சென்ற நேரம், வந்தநேரம் மற்றும் விசயங்கள் தெரியவரும் என்பதால் நானும் விசாரணை அதிகாரியும் மேற்படி லாக்புக்கை

நீதிமன்றத்தில் ஒப்படைக்காமல் மறைத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அன்று நான் சாட்சிகளாகிய கிராமநிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியவர்களை அரசால் எனக்கு வழங்கப்பட்ட தொலைபேசி எண்ணின் மூலமாக தகவல் தெரிவித்தேன். அந்த தொலைபேசியை பார்வையிடும் பட்சத்தில் எத்தனை மணிக்கு யார்யாருக்கு போன் செய்திருக்கிறேன் என்ற விபரம் வழக்கின் விசாரணையின் போது பார்த்திருந்தால் தெரியவரும் என்றால் சரிதான். அந்த கைப்பேசியின் தொடர்பு எண் -9498106453 ஆகும். கிராமநிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளருக்கு எந்த தொலைபேசி எண்ணிற்கு அழைத்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்த அறிக்கையில் அந்ததொலைபேசி எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கிராமநிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் எங்கு குடியிருக்கிறார்கள் என்று தெரியாது ஆனால் தருவைக்குளத்தில் இருப்பதாக சொன்னார்கள். நான் கிராமநிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளரையும் இரவு நேரத்தில் குற்ற வழக்கிற்காக அழைத்து செல்லும் விபரத்தை தெரியப்படுத்தினேன். ஒட்டப்பிடாரம் தாசில்தாருக்கு தொலைபேசியின் மூலமாக சுமார் 03.25 மணி அளவில் தெரியப் படுத்தினேன். இந்த விபரத்தை விசாரணை அதிகாரியிடம் தெரிவித்தேன் என்றால் சரிதான். 25 கிலோமீட்டர் செல்லவேண்டி இருந்த காரணத்தால் சம்பவ இடமாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள கடலோர காவல் படைக்கு இது குறித்து தகவல் தெரிவித்தேனா என்றால் இல்லை. அதைபோலவே தருவைக்குளம் காவல்நிலையத்திற்கும் தொலைபேசியின் மூலமாக தகவல் எதுவும் சொல்லவில்லை. தூத்துக்குடியிலிருந்து தருவைக்குளம் வரை கடற்கரை பகுதி தெரியும். தருவைக்குளத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீன்பிடி தொழிலாளர்கள் உள்ளது விபரம் தெரியும். மீன்பிடி தொழிலில்ஈடுபடுபவர்கள் இரவு நேரத்தில் மீன் பிடிக்க

செல்பவர்கள் அதிகாலை 5 மணிக்கு கரைக்கு வருவதும், காலை மீன்பிடிக்க செல்பவர்கள் அந்த நேரத்தில் கிளம்புவதும் வழக்கம்தான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு போனபோது அங்கு அருகில் எந்த படகுகளும் இல்லை. சந்தியாகப்பர்கோவிலுக்கு போவதற்கு சாலை வசதி உள்ளதா என்றால் மண்சாலை உள்ளது. சந்தியாகப்பர் கோவிலைச்சுற்றி ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் நான் போகும்போது அங்கு ஆள் நடமாட்டம் இல்லை. நாங்கள் அங்கு சென்ற நேரத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எங்கள் ஆட்களை தவிர யாரும் இல்லை. கடல் தண்ணீரில் இருந்து 500 மீட்டர் தொலைவில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வள்ளம் நிறுத்தப்பட்டிருந்ததா என்று கேட்டால் 50 மீட்டர் தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வள்ளத்தின் உயரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 15 அடி இருக்கும். அந்த வள்ளத்தின் அகலம் எவ்வளவு இருக்கும் என்று நான் குறிப்பிட்டு பார்க்கவில்லை. ஆனால் அது பெரிய வள்ளம்தான். சந்தியாகப்பர் கோவிலிற்கு எதிர்திசையில் தான் வள்ளம் நின்றது. 3 அடி தண்ணீரில் தான் வள்ளம் நின்றது. வள்ளத்தின் உள்ளே ஒரு அறையில் வைத்துதான் எதிரிகளை விசாரித்தேன். நான் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. நான்கு எதிரிகளை நான் விசாரித்தேன். ஆனால் அவர்களிடம் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை. நான் வழக்கிற்காக அவர்களை விசாரித்தாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வள்ளத்திற்குள்ளே உள்ள பொருட்கள், அதனுடைய அறை அமைப்புகள், எந்த அறையிலிருந்து எடுத்தோம் என்ற விபரம் மற்ற என்னென்ன கருவிகள் இருந்தது என்று சொல்லக்கூடிய இன்வன்டிரிஸ் அல்லது பார்வை மகஜர் எதுவும் நான் தயார் செய்யவில்லை. அந்த வள்ளத்தில் ஏற வேண்டும் என்றால் கயிறு, ஏணி மற்றொரு வள்ளத்தின் துணையோ இல்லாமல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வள்ளத்தில் ஏற முடியாது என்றும் அந்த வள்ளத்தில் ஏறி எதிரிகளை கைது செய்து,

பொருட்களை கைப்பற்றியதாக சொல்வது சரியல்ல. அந்த வள்ளத்தில் கயிறு மற்றும் டயர் தொங்கியது அதை பிடித்துதான் நான் ஏறினேன். டயர் எவ்வளவு உயரத்தில் இருந்தது என்றால் சுமார் 5 அடி உயரத்தில் தொங்கியது. என்னுடைய வாக்குமூலத்திலோ, கொடுத்த அறிக்கையிலோ, ஆவணங்களிலோ அந்த வள்ளத்திற்குள் எப்படி சென்றோம் என்று சொல்லவில்லை. எப்படி வள்ளத்திற்குள் சென்றேன் என்ற கேள்வி தற்போது எழுந்ததால் மிகைப்படுத்தி டயர் வழியாக சென்றேன் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் வந்தவர்கள் எல்லாம் அப்படித்தான் ஏறினார்கள் என்றால் சரிதான். இந்த எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எல்லாம் பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிய குற்றங்களாகும். எதிரிகளை கைது செய்யவேண்டும். ஆனால் இந்த வழக்கில் கைது செய்யவில்லை. எதிரிகளை நுண்ணறிவுப்பிரிவில் ஒப்படைக்கும் வரை நான் கைது செய்யவில்லை என்றால் சரிதான். அந்த வள்ளம் தனியாருக்கு சொந்தமான வள்ளம் என்றால் சரிதான். எதிரிகளை நான் ஒப்படைக்கும் வரை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. துாத்துக்குடி பகுதியில் கீழவைப்பாடு பகுதி எங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் அது சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தருவைக்குளத்தில் இருந்து சுமார் 12 முதல் 15 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ல் கடத்த முயன்ற நான்கு நபர்கள் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஒரே அறிக்கை தான் என்றாலும், அதில் உள்ள சங்கதிகள் ஒன்று தான் என்றாலும் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில்,சொன்ன இடத்தில், எதிரிகளை நான் பிடிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இருந்ததாக சொல்லப்படும் மூடைகளை வள்ளத்திற்குள் வைத்து பிரித்துப்பார்த்தோம். அந்த மூடைகளை கட்டி வைத்திருந்தார்கள். அதை அவிழ்த்து பார்த்து அதை அப்படியே மீண்டும்

கட்டிவிட்டோம். வள்ளத்தில் இருந்து என்னுடன் இருந்தவர்கள் மூலம் மூடைகளை இறக்கினோம். என்னுடைய வாகனத்தில் மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை ஏற்றி, 500 மீட்டர் தொலைல் இருந்த எடைபோடும் இடத்திற்கு எடுத்து சென்றேன். தடைசெய்யப்பட்ட போதைப்பொருட்களை வள்ளத்தில் வைத்து கைப்பற்றினேன். எடைபோடும் இடத்தில் இருந்த சாட்சிகளை விசாரித்தேன். அவர்கள் சாட்சியாக இருக்க விருப்பப்படாததால் நான் அவர்களை சாட்சியாக போடவில்லை. நான் வள்ளத்தில் வைத்து போதைப்பொருட்களை கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.3 ஆவணம் எடைபோட்டதற்கு பின்னர் தயார் செய்ததாகும். நான் அந்த இடத்தில் வைத்து மாதிரி எதுவும் எடுக்கவில்லை. அந்த மூடைகளுக்கு நான் சிறப்பு குறியீடு செய்தேனா, செய்யவில்லையா என்பது குறித்து எனது அறிக்கையில் சொல்லவில்லை. அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்பாக மாதிரி எடுப்பதற்கு கொண்டுசென்றேனா என்றால் நுண்ணறிவுப்பிரிவிடம் தான் நான் ஒப்படைத்தேன். 1 ம் எதிரியை நான் கைது செய்யாமல், வாக்குமூலம் எதுவும் பெறாமல் அவருக்கு மட்டும் சோதனை சம்மத கடிதம் தயார் செய்ததாக சொல்லியுள்ளதும், அ.சா.ஆ,2 ம் சட்டத்திற்கு உகந்ததல்ல என்றால் சரியல்ல. என்னுடைய அறிக்கையின் படியும், என்னுடைய விசாரணையின் படியும் நான்கு எதிரிகள் என நிர்ணயம் செய்திருக்கும் பட்சத்தில் 1 ம் எதிரியிடம் மட்டும் சோதனை சம்மத கடிதம் பெற்றிருப்பதாக சொல்வது சட்டப்படி தவறானது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு NDPS Act ன் விபரங்கள் அனைத்தும் தெரியும். பிரிவு-57 ன் படியான அறிக்கையானது என்னுடைய நேரடி அதிகாரியிடம் அனுப்பி வைக்கவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.5 அறிக்கை நுண்ணறிவுப்பிரிவு ஆய்வாளருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். NDPS ACT ல் பிரிவு-49 ல் என்ன

சொல்லப்பட்டுள்ளது என்பது தற்போது நினைவில் இல்லை. பிரிவு-49 ல் சொல்லப்பட்டுள்ளவாறு முழுமையாக சோதனை செய்யப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். அதைபோலவே பிரிவு-60,61,62,63 **NDPS ACT** என்ன சொல்கிறது என்று தற்போது ஞாபகம் இல்லை. கைப்பற்றப்பட்ட பொருட்களை **NDPS** பிரிவு 60, 61,62 ன் படி அரசுடைமையாக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய வாக்குமூலத்திலோ, தனி அறிக்கையிலோ, பிரிவு 57 ன் படியான அறிக்கையிலோ, கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கின் சொத்துக்கள் 1 ம்எதிரிக்கு மட்டும் சொந்தமானது என்று அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிரியிடம் இருந்து செல்போன்கள் சொன்ன நேரத்தில், சொன்னவிதத்தில் கைப்பற்றப் படவில்லை என்றாலும், அந்த செல்போனுக்கும் 1 வது எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. 4 வது எதிரியான செல்வராஜ்க்கு சொந்தமானதாக சொல்லப்படும் கைபேசியை 4 வது எதிரி இருக்கும்போது 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்வது ஏற்புடையதாக இல்லை என்றால் சரிதான். அந்த கைப்பேசியில் சிம்கார்டுகள் இருந்தது. கைபேசியில் உள்ள ஐ.எம்.இ.ஐ எண்ணை கண்டுபிடிக்கும் முறை தெரியும் என்றால் சரிதான். 1 வது எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக சொல்லப்படும தொலைபேசியில் சிம்கார்டு இருந்தது ஆனால் அந்த விபரத்தை அத்தாட்சியில் குறிப்பிடவில்லை. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் போதைப்பொருட்கள் மற்றும் வள்ளத்திற்கு 1 ம் எதிரிக்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரிகளை சோதனை செய்யும்போது ஒரு நீதித்துறை நடுவர் முன்னரோ, அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி முன்னரோ செய்யவேண்டும் என்று சட்டம் சொல்கிறது என்றால் சரிதான். அப்படிஇல்லாமல் எதிரியுடைய சம்மதத்தின் பேரில் சோதனை செய்யவேண்டிய அவசியமும் அத்தியாவசியமும் இருந்தால்

அந்த காரணத்தை கூறி உயர் அதிகாரிகளுக்கு பிரிவு 50 (6)ன் கீழ் 72 மணி நேரத்திற்குள் தகவல் அனுப்பி வைக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் அந்த சட்டத்தின் படி உயர் அதிகாரிக்கு தகவல் அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. தனியார் வாகனம் தயார் செய்து வழக்கில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் போதைப்பொருட்களை ஒரு சிறிய சரக்கு வாகனத்தில் ஏற்றி என்னுடைய அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம். அப்போது மணி 8 இருக்கும். சரக்குவாகனத்தின் பதிவு எண்ணோ, அந்த வாகனத்தை ஓட்டி நபரின் பெயரோ, அந்த வாகனம் எங்கிருந்து யாரால் வரவழைக்கப்பட்டது என்றோ எந்த விபரமும் என்னுடைய வாக்குமூலம் மற்றும் தனி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கடலில் மீன்பிடிக்கப்பயன்படும் கலங்களின் வகைள் மற்றும் வித்தியாசம் எனக்கு தெரியும். என்னுடைய அறிக்கையில் வள்ளம் என்றுதான் குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வள்ளத்தின் மதிப்பு எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கை ஜோடனை செய்ய ஏற்கனவே எங்களிடம் கையிருப்பில் உள்ள பிடிபட்ட வள்ளங்களையோ, ஓட்டையான உபயோகமற்ற வள்ளங்களையோ, பயன்படுத்தி வழக்கு பதிவு செய்துவிட்டு அதை நீதிமன்றத்திற்கு தெரிவித்த மாத்திரத்தில் அதை எடுத்து சென்றுவிடுவது வழக்கமாக வைத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தூத்துக்குடி திரேஸ்புரத்தினை சேர்ந்த மீனவர்களுக்கும், தருவைக்குளத்தை சேர்ந்த மீனவர்களுக்கும் மீன்பிடி சம்பந்தப்பட்ட தகராறின் காரணமாக திரேஸ்புரத்தை சேர்ந்த மீனவர்கள் மீண்டும் எந்தஒரு பிரச்சனையிலும் ஈடுபடக்கூடாது என்பதற்காக நீண்டநாள் காவலில் இருக்கக்கூடிய குற்றமாகிய இந்த வழக்கை ஜோடித்து பொய்யாக இந்த மீனவர்கள் மேல் போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவஇடத்தில் தயார் செய்ததாக சொல்லப்படும் ஆவணங்கள் எல்லாம் நான் சொல்லச்சொல்ல தலைமைக்காவலர்-ராமர் என்பவர் தட்டச்சு செய்தார்.

அத்தாட்சி எந்த நேரத்தில் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் 6.15 மணியிருக்கும். உதவி ஆய்வாளர்- ஜீவமணி தர்மராஜ் மூலம் போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவிற்கு தகவல் சொல்லச் சொன்னேன். அது 8.00 மணியிருக்கும். நாங்கள் அவர்களுடைய காவல்நிலையம் செல்லும் வரை அங்கிருந்து எந்த காவல் அதிகாரியும் எங்கள் காவல்நிலையம் வரவில்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட நான் தயாரித்தாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்களை போதைப்பொருள் நுண்ணறிவுப்பிரிவு ஆய்வாளரிடம் தான் சமர்ப்பித்தேன். என்னுடைய வாகனத்தில் எதிரிகளை ஏற்றிக்கொண்டு மற்றொரு வாகனத்தில் (சிறிய சரக்கு) கைப்பற்றதாக சொல்லப்படும் போதைப்பொருட்களுடன் நுண்ணறிவுப்பிரிவு அலுவலகத்திற்கு சென்றோம். நான் நுண்ணறிவு பிரிவு அலுவலத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் 10 நிமிடம் இருந்தேன். என்னை அன்றைய தினமே திரும்ப வரவழைத்து போதைப்பொருள் நுண்ணறிவுப்பொருள் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார் என்றால் மதியம் விசாரித்தார் மணி ஞாபகம் இல்லை. அதன் பின்னால் நான் இன்று இந்த வழக்கிற்கு சாட்சிசொல்ல வந்துள்ளேன். இடைப்பட்ட காலத்தில் இந்த வழக்கு புலன் விசாரணை அதிகாரியை நான் சந்திக்கவில்லை என்றால் இந்த வழக்கு சம்பந்தமாக சந்திக்கவில்லை. தற்போது சாட்சி நினைவில் இல்லை என பதிவு செய்யுமாறு கூறுகிறார். NDPS ACT பிரிவு 67ன் படி மீன்வளத்துறை அதிகாரிகளிடமிருந்தோ, தமிழ்நாடு கடலோர மீன் பிடி ஒழுங்குமுறை அதிகாரியிடமோ, போதைப்பொருள் வல்லுநரிடமோ, கடலோர காவல்படை அதிகாரியிடமோ, தகவல் பெறவும் விபரம் தெரிந்துகொள்ளவும் வாய்ப்பு இருந்தும் எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யவேண்டும் என்பதற்காக இதை கடைப்பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றிய இடத்திலேயே எடைபோடவேண்டும் என்பதை நான்

கடைப்பிடிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் வள்ளத்திற்கு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் அதைப்பாதுகாக்க எங்கள் காவல்நிலைய தலைமைக்காவலர்- திரு.இருதயராஜ் என்பவரை நுண்ணறிவுப்பிரிவிடம் ஒப்படைக்கும் வரை வள்ளத்திற்கு பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தினேன். அந்த வள்ளம் என்று, யாரிடம், எத்தனை மணிக்கு ஒப்படைக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நினைவில் இல்லை. சாட்சி தற்போது அன்றைய தினமே ஒப்படைக்கப்பட்டது என்றும் எத்தனை மணி என்று தனக்கு ஞாபகம் இல்லை என்றும் கூறுகிறார். ஒப்படைக்கப்பட்ட விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. காவலுக்காக நான் நிறுத்தி வைத்திருந்த தலைமைக்காவலருக்கு கடவுச்சீட்டு வழங்கினேனா என்றால் இல்லை. எனது அறிக்கையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வள்ளத்திற்கு தலைமைக்காவலரை ஒப்படைக்கப்படும் வரை பாதுகாப்பிற்காக நிறுத்தினேன் என்றோ அதை நுண்ணறிவு பிரிவு பாதுகாப்பிற்காக எப்போது, யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்ற விபரங்கள் நான் தயார் செய்த ஆவணங்கள் எதிலும் காணப்படவில்லை என்றால் சரிதான். எல்லைதாண்டி எந்த ஒரு படகும் செல்ல முயற்சிக்கும் பட்சத்தில் கடலோர காவல் படை மற்றும் மீன் வளத்துறை அதிகாரிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்றால் சரிதான். அப்படி கட்டுப்பாடுகள் இருக்கும் நிலையில் எதிரிகள் கடத்த முற்பட்டார்கள் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் பணிபுரிவர்களோடு அன்றை தினம் 3.35 மணிக்கு புறப்பட்டேன். சம்பவ இடத்தில் 4.15 மணிக்கு நான் சென்றபோது அங்கு ஏற்கனவே ஆஜரிலிருந்து கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியோருடன் 4.15 மணிக்கு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டேன் என்று விசாரணை அதிகாரியின் வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் நானும் என்னுடன் இருந்தவர்களும் எங்கள்

அடையாள அட்டையை காண்பித்து நாங்கள் யார் என தெரியப்படுத்தினோம். அதேபோல்கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளரும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்த விபரத்தை என் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். மேற்படி வள்ளத்தில் இருந்த வெள்ளை நிற சாக்குமூடை 15 எண்ணம் காணப்பட்டது. அதனை ஒவ்வொன்றாக பிரித்து பார்த்தபோது அதனுள் கஞ்சா வாசனையுடன் பூ, காய், விதைகளுடன் கூடிய கரும்பச்சை நிறத்தில் கஞ்சா காணப்பட்டது என்று எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். 1ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. பிரிவு-50ன் கீழ் நான் மேற்கொண்ட நடவடிக்கை, சோதனை சம்மதக்கடிதத்தை பற்றி என்னுடைய அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**2-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தருவைக்குளம் மீன் பிடி துறைமுகமானது சிறிய மீன்பிடி துறைமுகம் என்றால் சரிதான். அங்கு நாட்டுப்படகு மீனவர்கள் சங்கம், விசைப்படகு மீனவர்கள் சங்கம் என இரண்டு சங்கங்கள் உள்ளது. அங்கு வள்ளத்தை பழுதுநீக்கும் இடம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்திற்கு அருகாமையில் புதிதாக வள்ளம் தயார் செய்யும் இடங்கள் உள்ளது என்றால் அதை நான் பார்த்ததில்லை. அந்த இடத்தில் அரசால் அனுமதிக்கப்பட்ட மீன் வலைகளை உலர்த்தக்கூடிய கட்டிடம் உள்ளது என்றால் இருக்கலாம். அந்த இடத்தில் மூன்று மீன்பிடி தொழிலாளர் சங்கம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்திற்கு அருகாமையில் வள்ளங்கள், படகுகளில் சரக்கு ஏற்றி இறக்கும் மீன் இறங்குதளம் அமைந்துள்ளது என்றால் சரிதான். அது கடலில் 500 மீட்டர் அளவிற்கு நீண்ட பாலமாக இருக்கும். அதில் இரண்டு பக்கமும்

வள்ளங்களையும், படகுகளையும் நிறுத்தி மீன்களை இறக்குவதற்கும், மீன்பிடிக்க செல்லும்போது பொருட்களை ஏற்றும் வகையில் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் ஆரம்ப பகுதியில் புறக்காவல்நிலையம் உள்ளது என்றால் சரிதான். அதன் அருகாமையில் மீன் ஏலம் விடும் இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தை சுற்றி கடைகள் உள்ளது என்றால் சரிதான். அந்த இடம் எப்போதும் மனித நடமாட்டம் உள்ள பரபரப்பான பகுதி என்றால் சரிதான். அங்கு மீன் பிடி தொழில் சார்ந்த பல்வேறு தொழில்கள் செய்யும் நபர்கள் அங்கு இருப்பார்கள் என்றால் சரிதான். இரவு 11.00 மணியில் இருந்து மறுநாள் நண்பகல் 12.00 மணி வரை வியாபாரிகள்,மற்றும் பொதுமக்கள் வந்துசெல்லும் பரபரப்பான பகுதி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த இடம் காவல்துறை, மீன்வளதுறை, சுங்கத்துறையினரின் கண்காணிப்பில் உள்ள பகுதி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் சோதனைக்கு செல்லும்போது கடலோரகாவல் படை காவல்நிலையத்திலோ, தருவைக்குளம் காவல்நிலையத்திலோ தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். அங்கிருந்து யாரையும் உதவிக்கும் அழைக்கவில்லை என்றால் சரிதான். தராசில் பல்வேறு வகைகள் உண்டு. அதில் குறிப்பாக மிண்ணணு, எடைக்கல்லை பயன்படுத்தி எடைபோடும் தராசு, வில்தராசு போன்றவைகள் உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு வருடமும் தணிக்கை செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றால் சரிதான். தற்போது என்னால் எத்தகைய தராசு உபயோகிக்கப்பட்டது என்று சொல்ல இயலாது என்றால் சரியல்ல. எலக்ட்ரானிக் தராசில் எடைபார்க்கப்பட்டது. அந்த தராசு யாரிடம் வாங்கப்பட்டது என்ற விபரம் தெரியாது என்றால் அந்த ஏலக்கூடத்தில் இருந்த ஒரு கடையில் எடைபார்க்கப்பட்டது. அந்த கடைக்காரர் பெயர் விபரம் சொல்ல மறுத்துவிட்டார். அந்த இடத்தில் ஏலம் விடும் வியாபாரிகள் சுமார் 50 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2

ஆவணத்தில் 2 ம் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். 2 ம் எதிரியிடமிருந்து செல்போன், பர்ஸ் போன்ற எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 5 வரையான ஆவணங்களுக்கும் 2 ம் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2 ம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் உறவோ, நட்போ இருந்ததில்லை என்றால் சரியல்ல. ஒரு வள்ளத்தில் எந்த ஒரு பொருளையும் ஏற்றி இறக்க வேண்டும் என்றால் சிறு படகின் துணை இல்லாமல் ஏற்றி இறக்க முடியாது என்றால் சரியல்ல. நான் வெளி நபர்கள் யாரையும் உதவிக்கு வைத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எந்த வள்ளத்திலும் அறைகள் கிடையாது என்றாலும் மேல்பகுதி, கீழ் பகுதி என்று தான் இருக்கும் என்றாலும் சரியல்ல. நான் கூறியதுபோல் எந்த ஆவணங்களிலும் எந்த பக்கம் இருந்த அறை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி, சொன்ன விதத்தில், எந்தவித சோதனையும் செய்யவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றும் இரண்டாவது எதிரியை ஊர்கலவர வழக்கில் விசாரணைக்காக வரவழைத்து நுண்ணறிவுப்பிரிவிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. ஆலய முகப்பிலிருந்து 10 அடி தூரத்தில் கடல் அரிப்பை தடுப்பதற்காக கற்கள் உயரமாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் அப்படி தடுப்பு கற்கள் அடுக்கிவைக்கப்படவில்லை. அந்த ஆலயத்திற்கும், படகு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கும் இடையே சுமார் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. 500 மீட்டர் முதல் 700 மீட்டர் தூரம் இருக்கும். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் போதைப்பொருளுக்கும் 2 ம் எதிரிக்கும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. இரண்டு கிராமங்களுக்கு ஏற்பட்ட முன்விரோதத்தை தடுப்பதற்காகவும், புள்ளிவிபரக்கணக்கிற்காகவும், அரசு

உயர் அதிகாரிகளை திருப்திபடுத்தவும் பொய் வழக்கு போட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வள்ளத்தில் உள்ள அறைக்குள் சென்றுதான் சோதனை செய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் எனது நேரடிஅதிகாரிக்கு அறிக்கையை அனுப்பியதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1-ல் எனது அறிக்கையை எனது நேரடி அதிகாரி பெற்றுக்கொண்டதற்கான கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் எனது நேரடி அதிகாரி எனக்கு என்ன உத்தரவு கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உயர் அதிகாரியின் அனுமதி பெறும் முன்பு உடனடியாக கண்காணிப்பிற்கு செல்ல நம்பிக்கைக்குரிய காரணங்கள் எதையும் அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுசொல்லவில்லை என்றால் நான் எனது உயர் அதிகாரிக்கு தொலைபேசி மூலம் தகவலை தெரிவித்து அனுமதி பெற்று சம்பவ இடம் சென்றேன். தொலைபேசி வாயிலாக எனது நேரடி அதிகாரி என்ன உத்தரவு வழங்கினார் என்பதை நான் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம் பெற்ற பின்னர் 4 எதிரிகளையும் நான் தான் தனிப்பட்ட முறையில் சோதனை செய்தேன். சோதனை சம்மத கடிதத்தில் 3 ம் எதிரியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அவருக்கு உரிமை குறித்து சொல்லப்பட்டதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். 3 ம் எதிரியின் கையொப்பம் சோதனை சம்மத கடிதத்தில் வாங்க வில்லை என்றால் சரிதான். 3 ம் எதிரிக்கு முறைப்படியான உரிமை குறித்து தெரிவிக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக தெரிவித்ததாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.ஆ.3 ஆவணத்தில் 3 ம் எதிரியிடமிருந்து எந்தபொருளும் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தனி அறிக்கையை நுண்ணறிவு பிரிவு உதவி ஆய்வாளர் பெற்றதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். தனி அறிக்கையில்

ஆய்வாளர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.5 விரிவான அறிக்கையை தூத்துக்குடி நுண்ணறிவு பிரிவு ஆய்வாளருக்கு தான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதில் பெற்றுக்கொண்டதாக ஆய்வாளர் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சொத்துக்களை பட்டியலிட்டு எனது உடனடி உயர் அதிகாரிக்கோ, தூத்துக்குடி நுண்ணறிவுப்பிரிவு ஆய்வாளருக்கோ நான் சார்பு செய்து சான்று எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் எனக்கு உயர் அதிகாரி இல்லை என்றாலும் எனது சமநிலை அதிகாரி என்றாலும் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் , சொன்ன நேரத்தில், சொன்ன இடத்திற்கு தகவலின் பேரில் செல்லவில்லை என்றாலும் 3ம் எதிரி சம்பவ இடத்தில் வைத்து நான் பார்க்கவில்லை என்றாலும் அவரை நான் அழைத்து வந்து தூத்துக்குடி நுண்ணறிவு பிரிவு காவல்நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றாலும் சரியல்ல. என்னால் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டு அதில் நான் கையொப்பம் செய்து அதனை அனுசரித்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் எந்த விதத்திலும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக சொல்லப்படும் போதைப்பொருளுக்கு காவல்நிலைய மாதிரி முத்திரை எதுவும் பதிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கட்டாயமாக்கப்பட்ட போதைப்பொருள் விதிகள் முறையாக பின்பற்றவில்லை என்றால் சரியல்ல.

**<u>4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4ம் எதிரிக்கு தனியாக சோதனை சம்மத கடிதம் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 4ம் எதிரிக்கு சோதனை சம்மத கடிதம் சார்பு

செய்யப்பட்டு கையொப்பம் ஏதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். 4 ம் எதிரியை பொறுத்தவரை அ.சா.ஆ.2 சோதனை சம்மத கடிதம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 ஆவணத்தில் போதைப்பொருள் வள்ளத்தில் வைத்து கடத்தப்பட்டதாக பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1 ல் கஞ்சா கடத்தப் படுவதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வள்ளம் நிறுத்துவதற்கான இடம் கடலில் 500 மீட்டர் தூரத்தில் இருப்பதற்கான காரணம் அந்த பகுதி ஆழமாக இருக்கும். பொதுவாக கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தூரம் கடலுக்குள் செல்லவேண்டுமென்றால் படகு மூலம் தான் செல்லமுடியும் என்றால் சரிதான். தடைசெய்யப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டால் கைப்பற்றப்பட்ட இடத்தில் கட்டி, முத்திரை இடப்படவேண்டும் என்றால் சரிதான். அந்த முத்திரை காவல்நிலைய முத்திரை அல்லது போலீஸ்பட்டன் சீல்லாக இருக்கும் என்றால்ச ரிதான். முத்திரையிடப்பட்ட பொருட்களின் மீது சாட்சிகள் மற்றும் எதிரிகள் கையொப்பம் பெறப்படவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களை நுண்ணறிவுப்பிரிவில் நான் ஒப்படைக்கும் வரை கைப்பற்றப்பட்ட பொருட்களில் முத்திரையோ, சாட்சிகளின் கையொப்பமோ, எதிரிகளின் கையொப்பமோ பெறவில்லை என்றால் சரிதான். வெள்ளைநிற சாக்குமூடை என்ற விபரத்தை அத்தாட்சியில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் பொருட்கள் கைப்பற்றப்பட்ட இடம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியில் பொருட்கள் கடற்கரையில் வைத்து கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து எங்கள் காவல்நிலையம் செல்லவேண்டும் என்றால் தூத்துக்குடிநகர் வழியாகவும் புறவழிச்சாலை வழியாகவும் செல்லலாம், நகர் வழியே சென்றால் நுண்ணறிவுப்பிரிவு அலுவலகத்தை தாண்டித்தான் செல்லவேண்டும்.

மூடைகளை எடைபோட்டபோது ஒவ்வொரு மூடையிலும் எவ்வளவு எடை இருந்தது என தனித்தனியாக குறிப்பு எழுதப்பட்டு அதன்பின்னர் மொத்தஎடையும் தனித்தாளில் எழுதி குறித்துக்கொண்டேன் என்றால் சரிதான். அதனடிப்படையில்தான் அ.சா.ஆ.2 ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். எடைகள் எழுதிய தனித்தாளை நுண்ணறிவுப்பிரிவில் ஒப்படைக்கப்படவில்லை. நான் எடைபோட்ட இடம் அரசால் நடத்தப்படும் கட்டண எடைபோடும் நிலையமா என்றால் இல்லை. தனியாருக்கு சொந்தமான ஏலக்கூடமாகும். அந்த எடை எவ்வளவு இருந்தது என்பது குறித்து அச்சிடப்பட்ட குறிப்பு வரும் என்றால் சரியல்ல. எனது தனிஅறிக்கையிலும், பிரிவு-57ன் படியான விரிவான அறிக்கையிலும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் எனது வாகனத்தில் எடைபோட எடுத்துசெல்லப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை. எந்த வாகனத்தில் எடைபோட எடுத்துச்செல்லப்பட்டது என்ற விபரத்தை எனது தனிஅறிக்கையிலும், விரிவான அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 அத்தாட்சியில் 4ம் எதிரியின் கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான். எனது தனிஅறிக்கையிலும், விரிவான அறிக்கையிலும் எனது அலுவலகத்திலிருந்து சம்பவ இடத்திற்கு என்னென்ன உபகரணங்கள் எடுத்து சென்றேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தனிஅறிக்கையிலும், விரிவான அறிக்கையிலும் ஆவணங்கள் எவ்வாறு தயாரிக்கப்பட்டது, எந்த முறையில் பிரிண்ட் எடுக்கப்பட்டது என்ற விபரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2,3, ஆகியவை சம்பவ இடத்தில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. அ,சா.ஆ.1,4,5 ஆவணங்கள் அலுவலகத்தில் வைத்து தயார் செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதை தலைமைக்காவலர்-ராமர் நான் கூறியதை தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்தார். நான் சம்பவ தினத்தில் கடற்கரையிலிருந்து 500 மீட்டர் தொலைவில் உள்ள கடலுக்குள் சென்று சோதனை எதுவும் செய்தேனா

என்றால் இல்லை. சரக்கு வாகனத்திற்கு வாடகை கொடுத்து ரசீது பெறப்பட்டதா என்றால் ரசீது பெறவில்லை. வாடகை கொடுத்தால் அதை நான் அரசிடம் கிளைம் செய்து திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்றால் சரிதான். இந்த வழக்கில் அவ்வாறு நான் அரசிடம் கிளைம் செய்து பணம் திரும்ப பெறவில்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி, சொன்னநேரத்தில், சொன்னஇடத்தில் எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் அதை சரக்கு வாகனத்தில் எடுத்து செல்லவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான் இந்த வழக்கு சம்பந்தமாக நுண்ணறிவுப்பிரிவிடம் பொருட்களை ஒப்படைக்க உத்தரவு எதுவும் பெற்றப்பட்டதா என்றால் இல்லை. உயர் அதிகாரியின் வாய்மொழி உத்தரவின் பேரில் ஒப்படைத்தேன். சம்பவ இடத்தில் வைத்து வழக்கு சொத்துக்களை பிடித்தவுடன் உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தபோது அவ்வாறு நுண்ணறிவு பிரிவில் ஒப்படைக்க எனக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. சம்பவ இடத்திலிருந்து நுண்ணறிவு பிரிவு அலுவலகத்திற்கு 25 நிமிடத்தில் சென்றுவிடலாம். நான் நேரடியாக எங்கள் அலவலகம் சென்றதற்கு தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை. நான் சொன்னபடி பொருட்கள் கைப்பற்றப்பட்டு எங்கள் அலவலகத்தில் வைத்து தனி அறிக்கை தயார் செய்யப்பட்டது தவறு என்றாலும் இந்த வழக்கில் உள்ள காலதாமதத்தை ஈடுகட்ட வேண்டும் என்பதற்காக ஆவணங்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டு, அதற்கு ஏற்றாற்போல் வழக்கு பொருட்கள் ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>5 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னால் தயார் செய்யப்பட்ட தனி அறிக்கையில் 5ம் எதிரியின் பெயர்

இடம்பெறவில்லை என்றால் சரிதான். வழக்கிற்கும் 5 ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 5 ம் எதிரிக்கும் மற்ற எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் இந்த வழக்குசம்பந்தமாக எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.